KANTON AARGAU

**DEPARTEMENT**
**BILDUNG, KULTUR UND SPORT**
Abteilung Volksschule

23. நவம்பர் 2020

Tamilisch

**பெற்றோருக்கான தகவல்கள்**

# "மழலையர் பள்ளிக்கு முன்பே ஜெர்மன் மொழி ஊக்குவிப்பு" (முன்னோடித் திட்டம்)

---

## எல்லா குழந்தைகளுக்கும் மழலையர் பள்ளியில் (Kindergarten) நல்ல தொடக்கம்

எல்லா குழந்தைகளும் மழலையர் பள்ளியில் நுழையும் பொழுது நல்ல ஜெர்மன் மொழியறிவு பெற்று இருப்பது முக்கியம். நல்ல ஜெர்மன் மொழியறிவு மழலையர் பள்ளியிலும் பிற பள்ளிகளிலும் குழந்தைகளின் கற்றல் வெற்றியை அதிகரிக்கிறது.

ஆகவேதான் ஆர்காவ் கேன்டன், மழலையர் பள்ளிக்கு முன்பாகவே ஜெர்மன் மொழி அறிவை ஊக்குவிப்பதற்காக மற்ற நகராட்சிகளுடன் இணைந்து ஒரு முன்னோடித் திட்டத்தை செயல்படுத்துகிறது. போதிய ஜெர்மன் மொழி அறிவு இல்லாத குழந்தைகள் மழலையர் பள்ளிக்கு முந்தைய ஆண்டில் ஜெர்மன் மொழி ஊக்குவிப்பு சலுகையில் பங்கேற்பதே இதன் நோக்கமாகும். பல்வேறு நகராட்சிகளில் உள்ள நிலைமையைப் பொறுத்து இது ஒரு விளையாட்டு குழுமம் (Spielgruppe), பகல் நேர குழந்தைகள் பராமரிப்பு மையம் (Kita) அல்லது தேவைப்பட்டால் ஜெர்மன் மொழி பேசும் குழந்தைகள் பராமரிப்பு குடும்பமாக இருக்கலாம்.

"மழலையர் பள்ளிக்கு முன்பே ஜெர்மன் மொழி ஊக்குவிப்பு" ("Deutschförderung vor dem Kindergarten") திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் பின்னணி பற்றிய கூடுதல் தகவல்களை இங்கே காணலாம்: www.ag.ch/bks > über uns > Dossiers & Projekte > Deutschförderung vor dem Kindergarten.

## ஜெர்மன் மொழியறிவை மதிப்பிடுவதற்கான கேள்வித்தாள்

மழலையர் பள்ளியில் நுழைவதற்கு சுமார் 18 மாதங்களுக்கு முன்னர் உள்ள அனைத்து குழந்தைகளின் பெற்றோர்களும் நகராட்சியில் இருந்து ஒரு கேள்வித்தாளைப் பெறுவார்கள். இது குழந்தைகளின் ஜெர்மன் மொழியறிவை மதிப்பிட பயன்படுத்தப்படுகிறது. இந்த கேள்வித்தாள் பாசில் பல்கலைக்கழகத்தால் (வளர்ச்சி மற்றும் ஆளுமை உளவியல் துறை) உருவாக்கப்படும். அது கேள்வித்தாளின் மதிப்பீட்டையும் கவனித்துக் கொள்கிறது.

இந்த கேள்வித்தாள், எந்த குழந்தை ஜெர்மன் மொழி பேசுவதே இல்லை அல்லது மிகக் குறைவாகவே பேசுகிறது என்பதை தீர்மானிக்க பயன்படுத்தப்படும். நகராட்சி இந்த குழந்தைகளின் பெற்றோர்கள் உடன் தொடர்பு கொண்டு, மழலையர் பள்ளிக்கு முன் வருடத்தில் ஜெர்மன் மொழி ஊக்குவிப்பு சலுகையில் பங்கு பெறுவதற்கான வாய்ப்புகள் பற்றி அவர்களுக்கு தெரிவிக்கும். இந்த ஜெர்மன் மொழி ஊக்குவிப்புச் சலுகையில் பங்கேற்பது தன்ஆர்வத்திற்கு உட்பட்டது, ஆனால் மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. அத்தகைய ஜெர்மன் மொழி ஊக்குவிப்பச் சலுகையில் பெற்றோர்களின் பங்களிப்பு முடிந்தவரை குறைவாகவே

வைக்கப்படுகிறது. இந்த விவரங்களை நகராட்சி ஒழுங்குபடுத்துகின்றது மற்றும் உரிய நேரத்தில் அது பெற்றோர்களுக்குத் தெரிவிக்கின்றது.

**அனைத்து பெற்றோர்களுக்கும் கோரிக்கை**

இந்த திட்டத்தின் வெற்றிக்கு **அனைத்து பெற்றோர்களும்** இந்த கேள்வித்தாளை பூர்த்தி செய்ய வேண்டும் என்பது மிகவும் முக்கியம். ஜெர்மன் மொழி ஊக்குவிப்பு திட்டத்தின் மூலம் எத்தனை மற்றும் எந்தெந்த குழந்தைகள் பயன் அடைய முடியும் என்பதைப் பற்றிய முழுமையான விவரத்தை நகராட்சி பெற இது உதவுகிறது.

எனவே ஜெர்மன் மொழி பேசும் பெற்றோர்களும் இந்த கேள்வித்தாளை பூர்த்தி செய்து திரும்ப அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஜெர்மன் மொழி பேசும் குழந்தைகளுக்கு 5 கேள்விகளுக்கு மட்டுமே பதில் அளிக்க வேண்டியிருக்கும்.

## தகவல்களை கவனமாகக் கையாளுதல்

பூர்த்தி செய்யப்பட்ட வினாத்தாளில் உள்ள தகவல்கள், கவனமாகவும் கேன்டனின் தகவல் பாதுகாப்பு விதிமுறைகளின் படியும் கையாளப்படும்.

இந்த தகவல்கள் பாசில் பல்கலைக்கழகத்தால் பெயர் சொல்லப்படாமல் அனாமதேயமாக மதிப்பீடு செய்யப்பட்டு, அறிவியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும். புள்ளி விவர கணக்கெடுப்பிற்காகவும் மற்றும் முன்னோடி திட்டத்தின் மதிப்பீட்டிற்காகவும் அனாமதேயமான மதிப்பீடு மட்டுமே ஆர்காவ் கேன்டனுக்கு வழங்கப்படும்.

குழந்தைக்கு ஜெர்மன் மொழி ஊக்குவிப்பு தேவை என்று  தீர்மானிக்கப்பட்டால், அந்த குழந்தையின் பெற்றோருக்கு நகராட்சி - அல்லது நகராட்சியால் நியமிக்கப்பட்ட குழு - தகவல்களைத் தெரிவிக்கும். அவர்கள் பகல் நேர குழந்தைகள் பராமரிப்பு மையம் (Kita) மற்றும் விளையாட்டு குழுமம் (Spielgruppe) போன்ற மொழி ஊக்குவிப்பு மையங்களுக்கு, எந்த குழந்தைகளுக்கு ஜெர்மன் மொழி கற்பிக்கப்பட வேண்டும் என்ற விவரத்தை தெரிவிப்பதற்கும் அல்லது எந்தெந்த குழந்தைகள் இந்த ஊக்குவிப்பு திட்டத்தில் பதிவு செய்து கொண்டுள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ளவும் சிறப்புத் தேவையுள்ள குழந்தைகளின் தொடர்பு விவரங்களை பயன்படுத்துவார்கள். இந்த கேள்வித்தாள்களிலிருந்து பெறப்படும் அனைத்து தகவல்களும் இந்த முன்னோடி திட்டத்தைத் தவிர மற்ற எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாது. இந்த முன்னோடி திட்டம் முடிந்ததும் பூர்த்திசெய்யப்பட்ட அனைத்து கேள்வித்தாள்களும் அழிக்கப்படும்.

## கேள்விகள் மற்றும் நிச்சயமற்ற நிலை பற்றிய தகவல்கள்

“மழலையர் பள்ளிக்கு முன்பே ஜெர்மன் மொழி ஊக்குவிப்பு" என்ற முன்னோடித் திட்டத்தை அளிக்கும் ஒவ்வொரு நகராட்சியிலும், கேள்விகள் இருந்தாலும் அல்லது நிச்சயமற்ற நிலை இருந்தாலும் பெற்றோர்கள் தொடர்பு கொள்ளக்கூடிய தொடர்பு மையம் அல்லது தொடர்பு நபர் இருக்கிறது. இந்த நபர் அல்லது மையம் பற்றிய தகவல்களை பெற்றோர்கள் கேள்வித்தாள்கள் உடன் பெறும் நகராட்சியின் கடிதத்தில் காணலாம்.